சுற்று நிருப இலக்கம் : 05/2017

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு (மே.மா.)
இலக்கம் : 109,நான்காம் மாடி,
பிரதான வீதி,
பத்தரமுல்ல.
2017.03.31

மேல் மாகாணத்தின் அனைத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்,
மாவட்ட கிராமிய வங்கி ஒன்றியங்கள், சணச சங்கங்கள், மாவட்ட கூட்டுறவுச் சபைகள் மற்றும்
ஏனைய அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்,

**உயர் கல்வித் தகைமையைப் பெற்றுக் கொண்டமைக்கான ஊக்குவிப்புத் தொகையினை செலுத்துதல்.**

தலைப்பில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 4/2009 ஆம் சுற்று நிருபத்திற்கேற்ப உயர் கல்வித் தகைமையினைப் பெற்றுக் கொண்டதற்கான ஊக்குவிப்புத் தொகை செலுத்துவதை கீழ்க் காட்டப்பட்டவாறு மறுசீரமைப்பதற்கு இவ்வாணைக் குழு தீர்மானித்துள்ளது.

| | பெறப்பட வேண்டிய தகுதி (1) | ஒரு முறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு (2) | கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு எண்ணிக்கை (3) |
|---|---|---|---|
| 1 | கூட்டுறவு ஊழியர்களின் அறிவினை அதிகரிப்பதற்காக, கூழே 03 இன் கீழ் விபரிக்கப்படும் நிறுவனங்களிலிருந்து தமது பதவியுடன் தொடர்புடைய சித்தி பெற்ற டிப்ளோமா | | |
| | • 06 மாதங்கள் தொடக்கம் 01 வருடம் வரையான காலம் | ரூ.1500.00 | 01 |
| | • ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் | ரூ. 1500.00 | 01 |
| 2 | பட்டப் பின் பட்டச் சான்றிதழ் | ரூ. 3500.00 | 02 |
| 3 | பட்டயக் கணக்காளர் மற்றும் அதற்குச் சமமான வேறு பரீட்சைகளில் இறுதிச் சான்றிதழ் | ரூ. 3500.00 | 02 |
| 4 | கௌரவப் பட்டம் | ரூ. 2500.00 | 02 |
| 5 | சாதாரண பட்டம் மற்றும் அதற்குச் சமமான வேறு கற்கை நெறிகள் | ரூ. 2000.00 | 01 |
| 6 | கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் - பொலகொல்ல டிப்ளோமா | ரூ. 1750.00 | 03 |
| 7 | கூட்டுறவு உயர் தரம் (பூர்த்தியான சித்தி) | ரூ. 1500.00 | 02 |
| 8 | கூட்டுறவு சாதாரண தரம் (பூர்த்தியான சித்தி) | ரூ. 1250.00 | 01 |

2. சம்பள அதிகரிப்புத் தொகை அடிப்படையில் உரித்தாகும் மேலுள்ள அட்டவணையின் (3) ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு, அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படக் கூடாது என்பதுடன், அது தனியான கொடுப்பனவொன்றாக மாதாந்த சம்பளத்துடன் செலுத்தப்படல் வேண்டும்.

3. வேறு நிறுவனங்கள் -

I. இலங்கை கணக்காளர் தொழிநுட்ப நிறுவனம்
II. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்
III. இலங்கைப் பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம்
IV. இலங்கை உயர் தெழிநுட்பக் கல்வி நிறுவனம்
V. அத்தாட்சிப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம்
VI. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பதவியுடன் தொடர்புடைய துறையில் அமைந்த கற்கை நெறி
VII. இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட பதவியுடன் தொடர்புடைய துறையில் அமைந்த கற்கை நெறி

VIII ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனம்

4. ஆணைக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் கூ. ஊ. ஆ. கு. 01 மாதிரிப்படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களும் அதனுடன் சமர்பிக்கப்படல் அவசியம்.

I. ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரதி
II. பெற்றுக் கொண்ட கல்வி/ தொழிற் தகைமை தொடர்பான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்
III. இத்தகைமை பதவியினதும் மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டு உற்பத்தித்திறன் மீது தற்போது அல்லது எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தக் கூடிய விதம்
IV. போதுமான நிதி ஏற்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி
V. பணிப்பாளர் சபையின் தீர்மானம்

5. மேற்காட்டப்பட்ட தகைமை ஏதாவதொரு பதவிக்கு ஆட் சேர்ப்புச் செய்வதற்கான அடிப்படைத் தகுதியாக கருதப்பட்டிருந்தால் இக்கொடுப்பனவு உரித்துடையதாகாது

6. இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொடுப்பனவு முறை 2017.01.01 ஆந் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் 4/2009 ஆம் இலக்க சுற்று நிருபம் இதனால் செல்லுபடியற்றதாகின்றது

ஆணைக்குழுவின் நியதிகளிற்கேற்ப,

எஸ்.ஏ.எல்.ரங்கனி
செயலாளர்
கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு
மேல் மாகாணம்

பிரதிகள் :

01. பிரதான செயலாளர், மேல் மாகாணம்.
02. செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாணம்.
03. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ சங்கப் பதிவாளர், மேல் மாகாணம்.
04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - (கொழும்பு/கம்பஹா/களுத்துறை)
05. பணிப்பாளர், மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டம்.
06. செயலாளர், மத்திய அரசின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு
07. அனைத்து மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுச் செயலாளர்கள்.
08. அனைத்து தொழிற் சங்கங்கள் ஒன்றியங்கள்

கூட் ஊ ஆ கு 01

பொது முகாமையாளர் ஊடாக,
கௌரவ தலைவர்,
.................................................................................. கூட்டுறவுச் சங்கத்தினூடாக,
செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு.

**<u>உயர் கல்வித் தகைமையைப் பெற்றுக் கொண்டமைக்கான ஊக்குவிப்புத் தொகையினைப் பெற்றுக்கொள்ளல்..</u>**

என்னால் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்காக, மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு சுற்று நிருப இலக்கம்.................. இற்கமைவாக உரித்தாகும் கொடுப்பனவை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பூர்த்தி செய்து தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

I. பெற்றுக் கொண்ட தகைமை :
II. தகைமையைப் பெற்றுக் கொண்ட தினம் :
III. தகைமையைப் பெற்றுக் கொண்ட நிறுவனம் :
IV. ஆணைக் குழு அங்கீகரித்த பதவி :

என்னைச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான தகைமையொன்றாக இத்தகைமை கருதப்படவில்லை எனவும், எனது பதவி மற்றும் நிறுவனத்தின் செயல் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு உயர்த்துவதற்கு இத்தகைமை ஊடாக சிறந்த பங்களிப்பினை வழங்க பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் இங்கு குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

............................................................(ஒப்பம்)
பதவி
திகதி

செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இவ்வலுவலரை பதவியில் இணைத்துக் கொள்வதற்கான அடிப்படைத் தகைமையொன்றாக ........................................................................ (தற்போது பெற்றுக் கொண்டுள்ள தகைமை) தகைமை கருதப்படவில்லை எனவும், அவரது பதவி மற்றும் நிறுவனத்தின் செயல் உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கு இக்கொடுப்பனவு மூலம் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், இக்கொடுப்பனவைச் செலுத்துவதற்குப் போதுமான பொருளாதார வளம் இருப்பதாக திருப்தியடைகிறேன் எனவும் தெரியப்படுத்துகிறேன்.

I. ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரதி - இணைப்பு 01
II. பெற்றுக் கொண்ட கல்வி/ தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் - இணைப்பு 02
III. பணிப்பாளர் சபையின் தீர்மானம் - இணைப்பு 03

..........................................................................
பொது முகாமையாளர்

..........................................................................
தலைவர்
................................................................................ கூட்டுறவுச் சங்கம்.